# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW-8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆறுமுகம் | Caste | : | |
| S/o. | : | பழனியப்ப கவுண்டர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 11.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் கருக்குப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் பந்தல் போடும் வேலை செய்து வருகிறேன். குமார் எனது பக்கத்து காட்டுக்காரர். அவருடைய விவசாய நிலத்தில் உள்ள கிணற்றில் எனக்கும் பாகம் உள்ளது. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.

சுமார் 2 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் மதியம் சுமார் 3.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது என்னுடைய தம்பி மகன் ராஜிகுமார் எனக்கு போன் செய்தார். குமார் கிணற்றில் ஏதோ கிடக்கிறது

என்று சொன்னார். நான் சென்று பார்த்தேன். கிணற்றில் சடலம் கிடந்ததை பார்த்தேன். அந்த இடத்திற்கு போலிசார் வந்தார்கள். சடலத்தை கிணற்றில் உள்ள நீரை இறைத்து வெளியே எடுத்தார்கள். இறந்தவர் யார் என்பதை அப்போது தெரிந்து கொள்ளவில்லை. பின்னர் இறந்தவர் குறித்து எனக்கு தகவல் சொன்னார்கள். ஆனால் இறந்தவரின் பெயர் ஞாகமில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.